5. காவேரி மேலாண்மை ஆணைய முதல் கூட்ட முடிவின்படி காவேரியில் திறந்துவிடப்படும் தண்ணீர் அளவு பற்றிய விவரம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்த ஒரு காரியத்திற்காக தமிழகத்திற்கு நன்மை வர வேண்டுமென்று சட்டப் போராட்டம் நடத்தி, கனவு கண்டு, தன்னுடைய வாழ்க்கையில் போராடினார்களோ, அந்தக் கனவை அமைதிப் புரட்சி செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து, ஆணித்தரமான தீர்ப்பின்மூலம் விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்ற நடவடிக்கை எடுத்ததற்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுதலையும், நன்றியையும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எனது சார்பாகவும், இந்த அவையின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனதார தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களும் காவேரிப் பிரச்சினையிலே தங்களுடைய பங்கை ஆற்றினார்கள் என்பதற்கு தாங்கள் நன்றி தெரிவிப்பதிலே எனக்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால், இந்தக் காவேரிப் பிரச்சினையை ஆரம்பத்திலே இருந்து நடுவர் மன்றம் வேண்டுமென்றும், அதில் மத்திய அரசு தலையிட வேண்டுமென்றும் அதற்காக நடுவர் மன்றம் கொண்டு வந்து, இடைக்கால தீர்ப்புப் பெற்று, இறுதி தீர்ப்பைப் பெற்று காவேரிப் பிரச்சினைக்கு ஒரு தீர்ப்பைக் கொண்டு வந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கும் இந்த நேரத்தில் இந்தச் சபை நன்றி தெரிவிக்க வேண்டும். ஞாபகப்படுத்த வேண்டும்.*